பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் அலுவலகம், சென்னை – 51.

கூடுதல் பால் ஆணையர் (கூடுதல் பொறுப்பு) அவர்களின் செயல் முறை ஆணை.

முன்னிலை: – திரு. இரா.சந்திரசேகரன், B.A., H.D.C.,
கூடுதல் பால் ஆணையர் (கூடுதல் பொறுப்பு)

ந.க.எண். 2721 / ஆ3 / 2020 நாள்:09.09.2021

பொருள் :– பணிபமைப்பு – பால்வளத்துறை – பணிவரன்முறை – நேரடி நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப் பணியில் நியமனம் செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்களின் பணியினை பணி வரன்முறைபடுத்தி ஆணை பிறப்பித்தல் – தொடர்பாக.

பார்வை:

1) தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடிதம் எண்.2391 / PSD-1 / 2020 நாள்:28.05.2020
2) கூடுதல் பால் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.2721 / ஆ3 / 2020, நாள்.30.07.2020
3) துணைப்பதிவாளர் (பால்வளம்), திருவாரூர் அவர்களின் கடிதம் எண்.535 / 2020 / அ. நாள்.07.08.2021
4) துணைப்பதிவாளர் (பால்வளம்), விழுப்புரம் அவர்களின் கடிதம் எண்.756 / 2020 / அ, நாள்.22.07.2021
5) துணைப்பதிவாளர் (பால்வளம்), திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் எண்.1455 / அ / 2021, நாள்.28.07.2021.
6) துணைப்பதிவாளர் (பால்வளம்), உதகமண்டலம் அவர்களின் கடிதம் எண்.679 / 2021 / அ, நாள்.20.07.2021
7) துணைப்பதிவாளர் (பால்வளம்), இராமநாதபுரம் அவர்களின் கடிதம் எண்.579 / 2021 / அ, நாள்.22.07.2021.

படிக்க:–

1. அரசாணை எண் 191. பொதுத்துறை நாள் : 1.02.62
2. அரசாணை எண் 130, பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்த துறை, நாள் : 22.07.2008

------------

ஆணை–

பார்வை (1)ல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடிதத்தின்படி, இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்களுக்கு, பார்வை(2)ல் காணும் கூடுதல் பால் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, இத்துறையின் தலைமை அலுவலகம் மற்றும் சார்நிலை அலுவலகங்களில் பணியாற்றிட தற்காலிகமாக நியமனம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. பார்வை 3 முதல் 7 வரை காணும் துணைப்பதிவாளர் (பால்வளம்)களின் கடிதங்களில் 2020 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த இளநிலை உதவியாளர்களுக்கு பணிவரன்முறை செய்யக் கோரப்பட்டுள்ளது.

படிக்க 1ல் காணும் அரசாணையின்படி, இப்பணியாளர்கள், அவர்கள் பணியில் சேர்ந்த நாளான கீழ்காணும் அட்டவணையில் கலம் 3–ல் குறிப்பிட்ட நாள்முதல் பணிவரன்முறை செய்து இதன்வாயிலாக ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியாளர்கள் பெயர் / பதவி திருவாளர்கள் / திருமதி / செல்வி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் | பணிபுரியும் அலுவலகம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | S.தாமரைகண்ணன், இளநிலை உதவியாளர் | 05.08.2020 முற்பகல். | 05.08.2020 முற்பகல். | ஆணையர் அலுவலகம், சென்னை – 51 |
| 2 | V.சக்திவேல், இளநிலை உதவியாளர் | 10.08.2020 முற்பகல் | 10.08.2020 முற்பகல் | ஆணையர் அலுவலகம், சென்னை.51 |
| 3 | R.ராமதாஸ் இளநிலை உதவியாளர் | 06.08.2020 முற்பகல் | 06.08.2020 முற்பகல் | ஆணையர் அலுவலகம், சென்னை.51 |
| 4 | T.நந்தகுமார் இளநிலை உதவியாளர் | 06.08.2020 முற்பகல் | 06.08.2020 முற்பகல் | ஆணையர் அலுவலகம், சென்னை.51 |
| 5 | M.ஆதினம் இளநிலை உதவியாளர் | 05.08.2020 முற்பகல் | 05.08.2020 முற்பகல் | துணைப்பதிவாளர் (பால்வளம்), திருவாரூர் |
| 6 | S.தேவதாஸ் இளநிலை உதவியாளர் | 06.08.2020 முற்பகல் | 06.08.2020 முற்பகல் | ஆணையர் அலுவலகம், சென்னை.51 |
| 7 | M.ஜெயலட்சுமி இளநிலை உதவியாாா் | 06.08.2020 முற்பகல் | 06.08.2020 முற்பகல் | துணைப்பதிவாளர் (பால்வளம்), விழுப்புரம் |
| 8 | S.ப்ரியதர்ஷினி இளநிலை உதவியாளர் | 10.08.2020 முற்பகல் | 10.08.2020 முற்பகல் | துணைப்பதிவாளர் (பால்வளம்), திருச்சிராப்பள்ளி |
| 9 | P.பிரதாப் இளநிலை உதவியாளர் | 10.08.2020 முற்பகல் | 10.08.2020 முற்பகல் | துணைப்பதிவாளர் (பால்வளம்), உதகமண்டலம் |
| 10 | R.சுரேஷ்ராஜ் இளநிலை உதவியாளர் | 12.08.2020 முற்பகல் | 12.08.2020 முற்பகல் | துணைப்பதிவாளர் (பால்வளம்), இராமநாதபுரம் |

1. இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தப்பட்ட பணியாளர்கள், பணிவரன் முறைப்படுத்தப்பட்ட நாள் முதல் தொடர்ந்து வரும் மூன்றாண்டு பணிக்காலத்தில் தங்களது தகுதிகாண் பருவ காலமான இரண்டாண்டுகள் முடித்திடல் வேண்டும்.

2. இளநிலை உதவியாளர்கள், தகுதிகாண் பருவம் முடிக்கும் காலத்தில், தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வு (Tamilnadu Government Office Manual) மற்றும் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி மையத்தில் வழங்கப்பெறும், அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற்று நிறைவு செய்யவேண்டும். அவ்வாறு தேர்ச்சி

பெறாவிடில் அவர்களது தகுதிகாண் பருவம் முடிக்கப்படமாட்டாது என தெரிவிக்கப்படுகிறது. மேலும், மேற்கண்ட தேர்வுகள் மற்றும் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற பின்னரே இவர்களுக்கு இரண்டாம் ஆண்டு ஊதிய உயர்வு உள்ளிட்ட அடுத்த ஊதிய உயர்வுகள் வழங்கப்பெறும் என தெரிவிக்கப்படுகிறது.

3. இந்த பணிவரன்முறை ஆணை, 2018–19 மற்றும் 2019–20ம் ஆண்டிற்கான, தொகுதி–4ன் கீழான பணியிடங்களுக்கான ஆளெடுப்பு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற சென்னை / மதுரை கிளைகளில் தொடரப்பட்டுள்ள வழக்குகளின் தீர்ப்புக்கு உட்பட்டதாகும். (The regularization of the selected candidates is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble Madras / Madurai Bench of High Courts relating to Combined Civil Services Examination – IV for the year 2018-19 and 2019-20 recruitment)

மேற்காணும் நிபந்தனைகளின்படி மேற்படி 10 இளநிலை உதவியாளர்களின் பணியினை பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

(ஒம்)/– இரா.சந்திரசேகரன்,
கூடுதல் பால் ஆணையர்
(கூடுதல் பொறுப்பு)

<u>பெறுநர்</u>

1. திரு.S.தாமரைகண்ணன் / திரு.V.சக்திவேல் / திரு.R.ராமதாஸ் / திரு.T.நந்தகுமார் மற்றும் திரு.S.தேவதாஸ் , இளநிலை உதவியாளர்கள், தலைமை அலுவலகம்,சென்னை–51
2. சம்பந்தப்பட்ட இளநிலை உதவியாளர்கள், துணைப்பதிவாளர் (பால்வளம்)கள் அலுவலகம். – சம்பந்தப்பட்ட துணைப்பதிவாளர் (பால்வளம்)கள் மூலமாக.
3. துணைப்பதிவாளர் (பால்வளம்), திருவாரூர் / விழுப்புரம் / திருச்சிராப்பள்ளி / உதகமண்டலாம் மற்றும் இராமநாதபுரம்.
4. பிரிவு எ, தலைமை அலுவலகம், சென்னை – 600 051.
5. மாவட்ட கருவூலம், திருவாரூர் / விழுப்புரம் / திருச்சிராப்பள்ளி / உதகமண்டலாம் மற்றும் இராமநாதபுரம்.
6. இருப்புக் கோப்பு
7. பணியாளர்களின் பணிப்பதிவேடு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

கூடுதல் பால் ஆணையர் (கூடுதல் பொறுப்பு)க்காக